# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - 17.04.2025</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 12197/SCIC/2023</u>**

திரு துரை திருநாவுக்கரசு — மேல்முறையீட்டாளர்
த/பெ. கருப்பண கவுண்டர்
எண்.07, நத்தப்பாளையம் அஞ்சல்
மூலனூர், தாராபுரம், திருப்பூர்-638 106.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர் ...... பொதுஅதிகார அமைப்பு
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
டாஸ்மாக் லிமிடெட், திருப்பூர்

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 17/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், திருப்பூர்-க்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள்:திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர் கிராமம் புல எண்.577 மூலனூர் பேரூராட்சி மூலனூர் தாராபுரம் சாலையில் செயல்பட்டு வந்த மதுபானக்கடை எண்.3452 - தொடர்பாக- பொருண்மையில் கூறப்பட்டுள்ள மதுபானக்கடை எண்.3452 மேற்படி இடத்தில் செயல்பட்டு வந்துள்ளது. இந்த இடம் மற்றும் கட்டிட உரிமையாளரின் பெயர், முகவரி தேவை” என்பன போன்று 22 (இருபத்து இரண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 24/04/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 07/07/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 12197/SCIC/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரிய தகவல்களை வழங்க, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 31/08/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர், பொதுத்தகவல் அலுவலர்/மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1044/2023/அ1 நாள் 22/10/2024 வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர், 23/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளி காட்சி வாயிலான விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்று ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில் ஆணையத்தின் முன் திரு.வே.பண்டரிநாதன், மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட், திருப்பூர் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 12/09/2023 மற்றும் 04/11/2023 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக, மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் அத்தகவல்கள் சரியானதல்ல என்று தெரிவித்தார்.**

**5. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட், திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு இனம் வாரியாக திருத்திய / சரியான தகவல்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்தில் 15/05/2025 அன்று பிற்பகல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**6. மேலும், மனுதாரரின் 17/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (17/03/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு T.சுப்ரமணியன், மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திருப்பூர் (தற்போது) தனி துணை ஆணையாளர், (சமூக பாதுகாப்பு திட்டம்), தர்மபுரி மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு எவ்வித தகவலையும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, திரு.T.சுப்ரமணியன், முன்னாள் மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திருப்பூர் (தற்போது) தனி துணை ஆணையாளர், (சமூக பாதுகாப்பு திட்டம்), தர்மபுரி மாவட்டம் அவர்கள் மீது ஏன் பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை**

**எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று, அதனை 15/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12197/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர்,தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
டாஸ்மாக் லிமிடெட், திருப்பூர்.

2.திரு.T.சுப்ரமணியன்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட மேலாளர்
(தற்போது) தனி துணை ஆணையாளர்
சமூக பாதுகாப்பு திட்டம்
தர்மபுரி மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு துரை திருநாவுக்கரசு
த/பெ. கருப்பண கவுண்டர்
எண்.07, நத்தப்பாளையம் அஞ்சல்
மூலனூர், தாராபுரம், திருப்பூர்-638 106.

நகல்.

1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
தர்மபுரி மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC